செ.வெ.எண் : 55 / ஜூன் நாள் : 29.06.2017

## இராமநாதபுரம் மாவட்டம்

# ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குரிய புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல்கள் 30.06.2017 அன்று வெளியிடப்படவுள்ளது

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குரிய புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல்கள் நாளை (30.06.2017) காலை 11.00 மணியளவில் அந்தந்த ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சிகள் மற்றும் நகராட்சி அலுவலகங்களில் தொடர்புடைய வாக்காளர் பதிவு அலுவலர்களால் வெளியிடப்படவுள்ளது என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம், ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரண தேர்தல்களை நடத்துவதற்காக 05.01.2017-இல் வெளியிடப்பட்ட சட்டமன்ற வாக்காளர் பட்டியலின் அடிப்படையில் ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குரிய வார்டு வாரியான புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல்கள் தயாரிப்பதற்கான பூர்வாங்க பணிகள் நிறைவடைந்துள்ளன.

இதன்படி புதிதாக தயாரிக்கப்பட்டுள்ள ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குரிய வார்டு வாரியான புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியலில் ஆண் வாக்காளர்கள் 5,62,356 பேரும், பெண் வாக்காளர்கள் 5,62,266 பேரும், இதர வாக்காளர்கள் (திருநங்கைகள்) 70 பேரும் ஆக மொத்தம் 11,24,692 வாக்காளர்கள் உள்ளனர்.

ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குரிய புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல்கள் நாளை (30.06.2017) காலை 11.00 மணியளவில் அந்தந்த ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சிகள் மற்றும் நகராட்சி அலுவலகங்களில் தொடர்புடைய வாக்காளர் பதிவு அலுவலர்களால் வெளியிடப்படவுள்ளது என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**